Deposition of Witness
IN THE COURT OF DISTRICT MUNSIF CUM JUDICIAL MAGISTRATE
ATHOOR

**CC.No. 259/2023**

**Deposition of PW.1 (LW.1)**

| | | | | | |
|---|---|---|---|---|---|
| பெயர் | : | யோவான் தர்மர் | ஜாதி | : | |
| த/பெ | : | ரத்தினசாமி | தொழில் | : | விவசாயம் |
| கிராமம் | : | வடக்கு மேட்டுப்பட்டி | சமயம் | : | |
| தாலுகா | : | ஆத்தூர் | வயது | : | 37/2026 |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of 10.02.2026.

(1 முதல் 4 எதிரிகள் ஆஜர் இல்லை, பிரிவு 317 குவிமுச படி மனு தாக்கல் செய்து அம்மனு அனுமதிக்கப்படுகிறது )

**முதல் விசாரணை**

நான் வடக்கு மேட்டுப்பட்டியில் குடியிருந்துகொண்டு விவசாயம் செய்து வருகிறேன். இவ்வழக்கின் எதிரிகள் என் பக்கத்து தோட்டத்துக்காரர்கள். கடந்த 11.03.2023 அன்று மதியம் 12.30 மணியைபோல நான் எனது தோடத்தில் உள்ள புளியமரத்தின் மீது ஏறி புளியம்பழத்தை உழுப்பிக்கொண்டிருந்தேன். அப்பொழுது சிமியோன், அவரது மனைவி ஜாக்குலின் மேரி ஆகிய இருவரும் வந்து என் தோட்டத்திற்கு வரும் பாதையில் போகக்கூடாது என்று என்னிடம் சொல்லி என்னை ஜாக்குலின் மேரி செங்கல்லை எடுத்து என் தலையில் ஓங்கி அடித்தார். பின்னிட்டு என்னை எதிரி ஜாக்குலின்மேரி பிடித்துக்கொள்ள அவர்களது மகன்கள் மார்ட்டின் அசோக், கிங்ஸ்லி விஜய் ஆகியோர் கையால் என் நெஞ்சிலும், கன்னத்திலும் பலமுறை அடித்தார்கள். எதிரி சிமியோன் என்னுடைய இடது கணுக்காலுக்கு கீழ் உள்ள பாதத்தில் வெட்டினார். சம்பவ இடத்தில் அருகில் வேலை பார்த்துக்கொண்டிருந்த மெல்வின், வல்சா மேரி ஆகிய நபர்கள் வந்து சண்டையை விலக்கினார்கள். நான் புளியம்பழம் உலுப்பும்போது என் அம்மா, என் தம்பி, என் அப்பா ஆகியோர் உடன் இருந்தார்கள். என் அப்பா தற்போது இறந்துவிட்டார். சம்பவ இடத்தில் இருந்த என்

அப்பா காயம்பட்ட என்னை வழியில் வந்த இருசக்கர வாகனத்தை மறித்து என்னை திண்டுக்கல் அரசு மருத்துமனைக்கு அழைத்துச் சென்றார்.அங்கு எனக்கு தலையில் ஏற்பட்ட காயத்திற்கு 3 தையல்களும், இடது கணுக்காலுக்கு கீழ் 3 தையல்களும் போட்டார்கள். அங்கு 5 நாட்கள் நான் உள்நோயாளியாக சிகிச்சை பெற்றுக்கொண்டேன். நான் மருத்துவமனையில் சிகிச்சையில் இருந்தபோது புகார் கொடுத்தேன். என்னிடம் காட்டப்படும் புகார் மனு நான் கொடுத்தது தான். அதில் உள்ள கையொப்பம் என்னுடையது தான். அந்த கையொப்பத்துடன் கூடிய **புகார் மனு (அ.சா.ஆ.1/PW.1)** ஆக குறியீடு செய்யப்படுகிறது. போலிசார் என்னை விசாரித்தார்கள்.

**எதிரி தரப்பு குறுக்கு விசாரணை**

எதிரி தரப்பில் வழக்கறிஞர் ஆஜர், குறுக்கு விசாரணை செய்ய முன்வரவில்லை.

**Sd/-Thiru.S.Anbuthasan**
District Munsif cum Judicial Magistrate
Athoor